திரு. வீ. இராசகோபால் : தலைவரவர்களே, ஒவ்வொரு தாலுக்கா மருத்துவமனையிலும் 'தனி வார்டு' அமைக்க இந்த அரசு முன்வருமா? அதோடு ஒவ்வொரு தாலுக்கா மருத்துவ மனையிலும் 'இ.சி.ஜி.' எடுப்பதற்கு வசதிகள் செய்துகொடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தனி வார்டு என்பது எதற்கு என்ற அடிபப்டையை ஒட்டிதான் தீர்மானிக்கப்பட வேண்டும். அதுவும் மருத்துவமனைகளின் தன்மையைப் பொறுத்து, கட்டடங்களின் அமைப்பு, வசதியைப் பொறுத்து அமைக்கப்பட வேண்டும். தாலுக்கா மருத்துவமனைகளில் 'இ.சி.ஜி.' (E.C.G.) எடுக்கும் முறையை இரண்டு, மூன்று ஆண்டு காலத்திற்குக் கொண்டுவர முடியாது. ஆனால் மாவட்ட அளவில் அதற்கு ஏற்பாடு செய்ய அரசு முடிவு செய்திருக்கிறது.

Drinking water supply for Madurai

* 297 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the Tamil Nadu Water-supply and Drainage Board has prepared a scheme to increase the water-supply to Madurai City from the river Vaigai; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) மதுரை நகருக்கு வைகை ஆற்றிலிருந்து நீர் வழங்குவதைப் பெருக்குவதற்கான ஆய்வுப்பணி முடிவடைந்துள்ளது.

(இ) வரைவுச் செயற்குறிப்புகள் வகுக்கப்பட்டு வருகின்றன.

(முற்பகல் 9-30)

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இது எப்போது நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கலாம் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : வைகை நீர்த் தேக்கத்தில் இருந்து கொண்டுவர வேண்டிய திட்டம் மிகப் பெரிய செலவை ஏற்படுத்துவதாகும். அவ்வளவு பெரிய செலவில் நடைபெற வேண்டிய திட்டத்தைப்பற்றி நன்கு ஆய்வு செய்ய

வேண்டியிருக்கிறது. வைகை நீர்த் தேக்கத்திலிருந்து மதுரை நகருக்கு நீர் வழங்குவதுபற்றி ஆய்வு செய்ய மதுரையில் சிறப்புத் துணைக் கோட்டம் ஒன்றை அமைக்கத் தமிழ்நாடு குடிநீர் வழங்கு கழிவு நீர் அகற்று வாரியம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இடைக் காலத்தில் இப்போதுள்ள திட்டத்தை விரிவுபடுத்தி, இன்னும் அதிக அளவில் குடிநீர் வழங்கவும் முயற்சி எடுக்கப்பட்டு பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கு. திருப்பதி: மதுரை நகராட்சியை, மாநகராட்சியாக மாற்றி அமைத்திருப்பதன் மூலம் பல கிராமங்கள் அவற்றுடன் இணைக்கப்பட்டிருப்பதன் காரணமாக, இந்தத் திட்டத்தை துரித மாக நிறைவேற்றி குடிதண்ணீர் சப்ளையை அதிகரிக்கச் செய்ய சர்க்கார் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர்களே, வைகை நீர்த் தேக்கத்தில் இருந்து நீர் கொண்டு வருவது என்று சொன்னால், விரைவுத் திட்டம் என்ற அடிப்படையில் அதை இப் போது தொடங்கினாலும் அதை நிறைவேற்ற ஐந்து ஆண்டு களாகும். ஆகவேதான் இடைக்கால ஏற்பாடாக, இப்போதுள்ள திட்டத்தையே விரிவுபடுத்துவதற்கான யோசனை பரிசீலனையில் இருக்கிறது.

திரு. சோ. காவேரிமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சிக்கு குடிநீர் வழங்குவதற்காக ஒரு திட்டம் தயாரிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அமைச்சர் அவர்களுக்கேத் தெரியும். மதுரை மாநகராட்சி அனுமதியுடன் அதில் பலப்பல ஊராட்சி மன்றங்கள் சேர்க்கப் பட்டிருக்கின்றன. ஆகவே அதனை உடனடியாக நிறைவேற்றித் தர அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இப்போது எந்தத் திட்டத் தில் இருந்து நீர் கொடுத்துக் கொண்டிருக்கிறோமோ அந்தத் திட்டத்தை உடனடியாக விரிவுபடுத்துவதன் மூலம் கொடுக்கிற தண்ணீரின் அளவை அதிகப்படுத்தும் யோசனை அரசின் ஆலோசனையில் இருக்கிறது. வைகை நீர்த் தேக்கத்திலிருந்து மதுரை நகருக்கு நீர் வழங்குவது பற்றி ஆய்வு செய்ய மதுரையில் சிறப்புத் துணைக்கோட்டம் ஒன்றை அமைக்கத் தமிழ்நாடு குடிநீர்

வழங்கு கழிவுநீர் அகற்று வாரியம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஆய்வுப் பணி முடிவடைந்து வரைவுச் செயற்குறிப்புகளை மேற்படி வாரியம் தயாரித்து வருகிறது. கோச்சடையிலுள்ள நீர் சேமிப்புக் கிணற்றிலிருந்து அரசரடியில் தரை மட்டத்தளவில் தற்போதுள்ள நீர்த்தேக்கத்திற்கு ரூ. 16.50 இலட்சம் செலவில் 24 அங்குலம் விட்டமுள்ள வார்ப்பு இரும்பு பெருங்குழாய் அமைப்பதற்கான வரைவுச் செயற்குறிப்புக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கும் வாரியத்தின் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: வைகை நீர்த் தேக்கத்தில் இருந்து மதுரை மாநகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். மதுரையில் வருடா வருடம் எப்ரல், மே, ஜூன் மாதங்களில் குடிதண்ணீர் பற்றாக் குறை தொடர்ந்து இருந்து வருகிறது. இடைக்கால ஏற்பாடாக வாவது அரசரடியில் இருந்து தண்ணீர் சப்ளை செய்யும் திட்டத்தை விரிவுபடுத்தி அமைக்க வழிவகை செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அதைத்தான் குறிப் பிட்டேன். இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அரசரடியில் தற்போது தரைமட்ட அளவில் உள்ள பெரிய நீர்த்தேக்கத்தில் இருந்து சிறிய நீர்த்தேக்கங்கள், பங்கீட்டு அமைப்பு மூலமாக மதுரை நகருக்கு நீர் வழங்கப்படும். நீர் சேமிப்புக் கிணற்றில் இருந்து எடுக்கப்படும் நீரினைச் செவ்விய முறையில் வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் பிற பணிகளாகிய அரசரடியில் தரைமட்ட அளவில் மற்றுமொரு நீர்த் தேக்கத்தைக் கட்டுதல், வைகை ஆற்றுக்கு வடக்கேயுள்ள செல்லூர் நீர்த் தேக்கத்திற்கு நீர் வழங்கத் தனியாகப் பெருங்குழாய் அமைத்தல், வைகை ஆற்றின் தென் பகுதிகளுக்கு நீர் வழங்கும் கிளைக் குழாய்களைச் சீர்செய்தல், அரசரடியில் உள்ள நீர் ஊற்று நிலையத்தில் கூடுதலாக விசையேற்றங்களை நிறுவுதல் முதலியவை மேற்படி நீர் வழங்கு திட்டத்தில் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

திரு. த. சோணையா: தலைவரவர்களே, வைகை நீர்த் தேக்கத்தில் இருந்து மதுரை மாநகருக்கு நீர் வழங்க திட்டமிடப் பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இந்தத் திட்டத்தில் மதுரை சமீபத்தில் மாடக்குளம், பொன்மேனி, தானைத் தலைவர்

1974 மார்ச் 6]

டாக்டர் கருணுநிதி நகர், அறிவுக்கு அறிவாலயம் அறிஞர் அண்ணு அவர்களுடைய நகர் ஆகியவை எல்லாம் சேர்க்கப் பட்டிருக்கிறதா? இல்லாவிட்டால் சேர்க்கப்படும் என்பதற்கான உத்தரவாவது பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இதுபற்றி பரிசீலிக்கப் படும்.

அரிசனக் குடியிருப்புக்களுக்குக் குடிநீர் வழங்கல்

*298 வினு—திரு. த. சோனையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றி யத்தைச் சார்ந்த செம்பட்டிமடை அரிசன குடியிருப்புக்குப் பாது காக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த செம்பட்டிமடை அரிசன குடியிருப்புக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக செயற்குறிப்பு மாவட்ட ஆட்சித் தலேவரின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. த. சோனையா: இந்த செம்பட்டிமடை திருப்புவனம் ஒன்றியத்தில் இருந்தாலும், அது அருப்புக்கோட்டை தாலுக்கா வின் அருகில் அமைந்திருக்கிறது. அந்த ஊர் அரிசனக் குடியிருப் பில் உள்ள அரிசன மக்கள் குடிக்கக் கூடத் தண்ணீர் இன்றிக் கஷ்டப்படுகிருர்கள். செம்பட்டிமடை அரிசனக் குடியிருப்பில் உள்ள அரிசன மக்களுக்கு தண்ணீர் கொண்டுவந்து கொடுக்கிற திட்டத்தை தீவிரப்படுத்தி, இதை ஒரு முனைப்புத் திட்டமாக செயல்படுத்த, முன்னுரிமை வழங்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இதற்கு நிதி இருபத்தைந்தாயிரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலேவரின் பரிசீலனை முடிந்த பிறகு இது விரைவுபடுத்தப்படும்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS